68151

# விசார சருமர்

என்னும்

# சண்டேசுர நாயனார் சரித்திர

# நாடகம்

O — 2MKM4
N30
68151

ஓம்:

# விசார சருமர்

என்னும்

# சண்டேசுர நாயனார் சரித்திர நாடகம்.

ஆசிரியர்

K. S. கல்யாணசுந்தர முதலியார்,

கோமாளப்பேட்டை.

---

(முதல் பதிப்பு)

1000—காப்பிகள்.

மன்னார்குடி

பாரதி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

---

1930.

rved] [விலை அணா 2

DEC 1930

O-, 2mkm,V N30.

68151

ஓம்:

# விசார சருமர்

என்னும்

# சண்டேசுர நாயனார் சரித்திர நாடகம்.

DEC 1930

ஆசிரியன்
S. கல்யாணசுந்தர முதலியார்,
கோமாளப்பேட்டை.

---

ஸ்ரீ இராமலிங்கம் லைப்ரெரி,
கோமாளப்பேட்டை,
கோட்டூர். P.O.
1930.

விலை] [அணா 2.

68151

# முகவுரை.

அன்பர்களே!...

எந்தத் தேசத்திலும் எந்தக் காலத்திலும் பொது மக்களுக்கு அறிவை ஊட்டுவதற்கு முக்கிய சாதனமாயிருப்பது நாடகம். இயல், இசை, நாடகமென முத்திறப்பட்டு, நடராஜப்பெருமானையே தந்தையாகக்கொண்டு பகலெனக் கதிர்பரப்பிட விளங்கிய நமது தாய்மொழி நாடக உணர்ச்சியைக் கைநழுவவிட்டதனாலேயே கீழ்நிலையடைய நேரிட்டது. இப்பெருங்குறையை நீக்கி, நாடகம் என்பது இழிதொழில் என்ற ஆதாரமற்ற பழமொழியை விலக்கி தமிழ்த் திருவாளர்களான சூரியநாராயண சாஸ்திரிகள், சம்பந்த முதலியார் இவர்கள் போன்ற தமிழ்ப்புலவர்கள் ஊட்டிய நாடகவமுதங்கள் தமிழ் மக்களின் உள்ளங்களில் இன்சுவையைப் பெருக்கிவிட்டன. ஆயினும், அப்பெரியார்களின் நாடகங்கள் முதியோர்களுக்குத்தரும் அத்துணைச்சுவையை இளைஞர்களுக்குத் தருகின்றதில்லையென்பது கண்கூடு.

இளமையிலேயே, சிறுவர்கள், நாடகச்சுவையை அனுபவிக்கவேண்டும் என்னும் எனது நெடுநாள் ஆசையைப் பூர்த்தி செய்யவேண்டி, பக்திரசம் ததும்பியதும், ஜீவகாருண்யம், வைராக்யம், முதலிய நற்குணங்களின் ஊற்றுமாகிய இச்சண்டேசுர நாயனாரின் கதாமிர்தத்தை நாடகமாக வரையத்துணிந்தேன். இவ்வெழுச்சி, சிறுவர்களின் ஜீவியத்தில் ஒரு புதிய மாறுதல் உண்டாக்கும் என்பது எனது துணிபு. இன்னால், முதல் மலராக, இதனைத் தொடர்ந்து இளைஞர்களுக்காக பல நாடகங்கள்

வெளியிடத்தீர்மானித்துள்ளேன். பிழைபொறுத்து ஊக்குவித்தல் பெரியோர்களின் கடனாகும்.

எனக்கு ஊக்கம் அளித்த பல நண்பர்களுக்கும், எனது துணையெனநின்ற திருத்துறைப்பூண்டி பண்டிதர் ஸ்ரீமான் ரத்நம் அவர்களுக்கும், விரைவில் வெளியிட்டுதவிய பாரதி அச்சுக்கூடத்தாருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கல்யாண விலாசம்
கோமாளப்பேட்டை
27—9—1930

S. கல்யாணசுந்தர முதலியார்,
ஆசிரியன்.

ஓம்.
சிவபெருமான் துணை.

# விசாரசருமர்,
அல்லது
# சண்டேசுர நாயனார் சரித்திர நாடகம்.

## நாடக பாத்திரங்கள்.

எச்சதத்தர் — திருச்சேய்ஞ்ஞலூரில் ஒரு பிராமணர்
விசாரசருமர் — எச்சதத்தரின் குமாரர் (சண்டேசுரர்)
சிவபெருமான்—
பார்வதிதேவி—
பிராமணர்கள். இடையர். பாடசாலை மாணாக்கர்கள்.
கதை நிகழும் இடம்:— திருச்சேய்ஞ்ஞலூர், மண்ணியாற்றங்கரை

உ

திருச்சிற்றம்பலம்

## அர்ப்பணம்.

பவத்தொடர் நீங்கிச் சிவத்தொடு கலந்த
தண்ணளி நிறைந்த புண்ணியத்தந்தாய்!
ஒப்பா ரிலாத சுப்பா முதலியார்
எனும்பெயர் தாங்கிச் சினந்தவிர்த் துயர்ந்தாய்!
அன்பின் இணைந்த நின்பொன் னடிக்கே
இச்சிறு நூலை இச்சையின் அளித்தனன்.

ஆசிரியன்

---

வேதமலி செய்ஞ்ஞலூ ரெச்சதத்தன்
விளங்கிய செய்மறைபயிலும் விசாரசன்மர்
கோதன மேய்ப்பவன் கொடுமை பொறுது தாமே
கொண்டுநிறை மண்ணியின் றென்கரையினீழற்

ருதகியின்மணலி லிங்கத்தான் பாலாட்டத்
தாதை பொறுதவையிடறுந்தாள் கண்மாளக்
காதி மலர்த்தாம முயர்நாமமுண்ட
கலமகனும் பதமருளற் கைக்கொண்டாரே.

ஓம்

# விசாரசருமர் நாடகம்.

## அங்கம்—1.

### காக்ஷி—1.

இடம்:— திருச்செய்ஞ்ஞலூர் மண்ணிநதிக்கரை.
காலம்:— பகல்.

பாத்திரங்கள்—விசாரசருமர், பாடசாலை மாணவர்கள். (எல்லோரும் பாடிக்கொண்டு வருகிறார்கள்.)

"திருச்சிற்றம்பலம்"

தலையே நீவணங்காய், தலைமாலைதலைக்கணிந்து
தலையாலேபலி தேருந்தலைவனைத், தலையேநீவணங்காய்
தேடிக்கண்டுகொண்டேன் திருமாலொடு நான்முகனுந்
தேடித்தேடொணாத் தேவனையென்னுள்ளே,
தேடிக்கண்டுகொண்டேன்.

விசாரசருமர்:— நண்பர்களே! இந்த இடத்தைப் பார்க்கப் பார்க்க வெகு ஆனந்தமாக இருக்கின்றது. இங்கு நாம் பொழுதைப்போக்கலாம் என்று எண்ணுகிறேன்.

1வது மாணுக்கன்:— உனக்கு மரம், மட்டை, குளம், குட்டை, யாட்டுமந்தை, இவைகளில் ஒரு பைத்தியம். காற்றில் உலாவி வருவதை விட்டு இங்கு பொழுதைப் போக்கலாமாம். சரிதாண்டாவாடா.

விசாரசருமர்:— நண்பர்களே! ஈசனது சிருஷ்டியைக் கண்டு ஆனந்தம் கொள்வதைவிட்டு வீண்கதைகள் பேச எனக்கு பிரியம் இல்லை. உங்களுக்கு இது விஷயத்தில் என்னிடம் கொஞ்சம் அருவை இருப்பதாகத் தெரிகிறது.

2வது மாணாக்கன்:— *விசாரசருமா! எங்களுக்கு உன்னிடம் அசூயை ஒன்றுமில்லை, உலகம் தெரியாமல், நீ சாமி, பூதம், சிருஷ்டி என்று சொல்லிக்கொண்டிருக்கிறாய், பார். அது தான் பிடிக்கவில்லை.*

விசாரசருமர்:— *நண்பர்களே! அப்படியா, மாயையாகிய இவ்வுலகில் எதுதான் பிடிக்கிறது. ஒன்றும் இல்லை வாஸ்தவமான சங்கதியைத் தான் நீங்கள் சொல்லுகிறீர்கள். அதுபோகிறது, அதோ! பார்த்தீர்களா! பசுக்கூட்டங்களை! அவைகள் தங்கள் கன்றுகளுடன் புல்மேயும் அழகை.*

3வது மாணாக்கன்:— *இவன் என்னடா, சிறு காரியங்களைக்கூட, பெரிய ஆச்சர்யமாகப் பேசுகிறான். பசுக்கள் புல்மேய்வது ஒரு அதிசயமா!*

விசாரசருமர்:— *அடடா! அந்தக் கொடிய பாதகர்கள், அப்பசுக்களை ஏன் இப்படி அடிக்கிறார்கள். என்ன கஷ்டம்! என்னகஷ்டம்!!*

3வது மாணாக்கன்:— *அடே! இவன் என்னடா, பயித்தியம் பிடித்தவன்போல் பேசுகிறான். மாட்டுக்காரன் மாட்டையடித்தால் இவனுக்கென்ன! ஏண்டா! விசாரசருமா! அதோ! அந்தமாடு உங்காத்துமாடா?*

விசாரசருமர்:— இல்லை.

2வது மாணாக்கன்:— *பிறகு உனக்கு ஏன் இவ்வளவு வருத்தம் உண்டாகிறது.*

விசாரசருமர்:— *நம்மாத்து மாடு என்றால் ஒரு விதம், பிறாத்துமாடு என்றால் ஒருவிதமோ? நன்றாகஇருக்கிறது. வாய்பேசாத ஜீவர்கள் அல்லவா? அதை அடிப்பதால் என்ன பிரயோஜனம்.*

4வது மாணாக்கன்:— *ஏண்டா! உனக்கு வயதென்ன ஆகிறது, மாட்டுக்காரன், மாட்டை அடிக்காமல் எப்படி*



*இருப்பான். சாதாரணமாய் மாடுகள் துஷ்டத்தனம் செய்யும். அதை அடக்கி வைப்பதற்கு "அடியாதமாடு படியாது" என்று சொல்வதைப் போல், அடிக்கத்தானே செய்வார்கள், இதற்கெல்லாம் நீ கஷ்டப்படலாமோ?*

விசாரசருமர்:— *நண்பர்களே! பகுத்தறிவுடைய மானிடராகிய நாமே, தெரிந்தும், துஷ்கிருத்தியங்கள் செய்கிறோம், மிருகஜாதிகள் எப்படி சத்துவகுணத்தோடு இருக்கும்? அடபாபமே? அதோபார், ஓர் ஈற்றுப் பசுவை மட்டைக்கழியால் அடிக்கிறான். என்ன கொடுமை. அடே! இடையனே! அடிக்காதே பாபம் பாபம் வேண்டாம் வேண்டாம். ஹே! ஈசா! இதைக்கண்டு எப்படி மனம் சகிக்கமுடியும்.*

*(பசுக்கூட்டங்கள் நிற்கும் இடத்தைநோக்கி ஓடுகின்றான்.*

மாணாக்கர்கள்:— *இவனுக்கு வேறு வேலை கிடையாது. வாருங்கள் நாம் வீட்டிற்குப்போவோம்.*

*(காட்சி முடிவு)*

---

காக்ஷி—2.

இடம்:— *திருச்சேய்ஞலூர் மந்தைத்திடல்.*

*காலம்:- சாயங்காலம்.*

*பாத்திரங்கள்:— விசாரசருமர், இடையர்கள்.*

*(இடையர்கள் மாட்டை இங்கும் அங்கும் அடிக்கிறார்கள்)*

விசாரசருமர்:—

*"மந்திரமாவது நீறு, வானவர்மேலது நீறு*
*சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு*
*தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு*
*செந்துவர்வாயுமை பங்கன்திருவாலவாயன் திருநீறே.*
*(சம்பந்தர்.)*

இடையர்களே! வேண்டாம் கோஹத்திசெய்யாதீர்கள். உலகமே உருக்கொண்டஜீவன் — மகாபாபமான கார்யத்தில் நீங்கள் ஈடுபடாதீர்கள்.

இடையன்:— தம்பி, மாட்டை அடித்தால் என்ன? சிறிது நேரத்திற்குமுன், அந்தப்பயலைக் கொன்றுவிடப்பார்த்தது, அந்த ஈற்றுப்பசு. நான் அதை அடிக்காவிட்டால் அந்தப்பயல் எமலோகத்திற்கு போயிருப்பான்.

விசாரசருமர்:-இடையனே! வாய்பேசாத ஜீவன், அதற்கு என்ன தெரியும் அடித்ததினால் அதற்கு பகுத்தறிவு உண்டாகிவிடுமா? மேலும், பசுக்களின் பஞ்சகவ்யம் எம்பெருமான் சிவபெருமானுக்கு அபிஷேகத்திற்கு முக்கியமாக பிரயோஜனப்படுகிறது. சைவசாதனமாகிய விபூதிக்கு மூலகாரணம் இப்பசுக்களின் சாணம் அன்றோ! விபூதியாகிய திருநீற்றின் பெருமையைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? இனிமேலாவது அடிக்காமல் இருப்பீர்களானால் உங்களுக்கு புண்ணியம் உண்டு. இந்தப்பசுக்களை அடிக்கவும் மனம் வருமோ. இடையனே நாளை முதல் நானே இந்தப் பசுக்கூட்டங்களை மேய்த்துவருகிறேன். நீங்கள் கஷ்டப்படவேண்டாம்.

இடையன்:— பாப்பா வூட்டுதம்பி, அக்ராரத்து அய்யாக்கள் என்னை கோவிச்சுக்கொள்வாங்க நீங்கள் மாடுமேய்க்கலாமா? வேண்டாம் இனி நான் மாட்டை அடிக்கவில்லை நீங்க ஊட்டுக்கு போங்கள். நாங்களும் மாடுகளை ஓட்டவேண்டும்.

விசாரசருமர்:— இடையர்களே! நானும் மாடுகளோடு வருகிறேன்.

இடையன்:— வேண்டாம், நீங்கள் முன்னதாக ஊட்டுக்கு போங்க.



விசாரசருமர்:— முடியாது. உனக்கு ஏன் இதில் பிடிவாதம்? நான் பசுக்கூட்டத்துடன் தான் வருவேன்.

இடையன்:— இது ஏது பெரும் சங்கடமாக இருக்கிறது தம்பி! ஊட்டுலே அய்யா இடம் மாட்டை அடித்ததாகச் சொல்லாதே.

விசாரசருமர்:—கண்டிப்பாய்ச் சொல்வேன், நீ பண்ணிய கொடுமையைக்கண்ட என் மனம் இன்னும் பதைபதைக்கின்றது.

இடையன்:— வேண்டாம் தம்பி, உங்களுக்கு புண்ணியம் உண்டு.

விசாரசருமர்:— இடையனே! இனியேனும் இம்மாதிரியான கொடுஞ்செய்கையைச் செய்யாதிருப்பாயானால் நான் வீட்டில் சொல்லவில்லை. வாருங்கள், மாட்டை ஓட்டிக்கொண்டு போவோம்.

(யாவரும் போகிறார்கள்.)

(காட்சி முடிகிறது.)

---

## காக்ஷி—3.

இடம்:-மண்ணியாற்றங்கரை.

காலம்:-சாயங்காலம்.

பாத்திரங்கள்—விசாரசருமர், பாடசாலை மாணாக்கர்கள்.

மாணாக்கர்கள்:— (பாடிக்கொண்டு வருகிறார்கள் விசாரசருமரும் உடன் வருகிறார்.)

இராகம் : தேவகாந்தாரி — தாளம் : ஆதி.

"இசைந்த ஏறுங்கரியுரி போர்வையும் எழில்நீறும்
இலங்கு நூலும் புலியதளாடையு மழுமானும்
அசைந்ததோடுஞ் சிரமணிமாலையு முடிமீதே
அணிந்தஈசன் பரிவுடன் மேவிய குருநாதா

உகந்தசூரன் கிளையுடன் வேற    முனிவோனே
உகந்தபாசங் கயிற்றொடு தூதுவர்    மெலியாதே
அசந்தபோதென்றுயர் கெடமயில்மிசை    வரவேணும்
அமைந்தவேலும் புயமிசைமேவிய    பெருமாளே.

மாணாக்கன்:— விசாரசருமா! பாடசாலையில் படிப்பதை விட்டு, ஏண்டா இப்படி மாடுமேய்க்கிறாய்? பிராமணாள் வீட்டு பிள்ளையாயிருந்தும் மாடுமேய்க்கும் தொழிலா செய்யவேண்டும்?

விசாரசருமர்:— எனது நண்பர்களே! பசுமேய்க்கும் தொழில், இழிவன்று. பரமாத்மாவான கிருஷ்ண பகவான், பசுக்களைமேய்த்துவருவதையே உத்தம தருமம் என்று எண்ணி பசுநிரையைப்புலன்களுக்கு ஓட்டிமேய்த்து வருவார் மேலும், நண்பர்களே! பசுக்களின் பெருமையைப்பற்றிப் பெரியோர்கள், அளவு கடந்து சொல்லியிருக்கிறார்கள். நமது பாடசாலையிலும் நாம் படித்ததில்லையா? எனக்கு பசுக்களிடத்தில் ஏற்பட்டுள்ள பிரியத்திற்கு எல்லை கிடையாது.

1வது மாணாக்கன்:— இப்போது தெரியாது தம்பிக்கு, படிப்பு வேண்டாம் மாடுமேய்க்கட்டும்.

(மரத்தடியில் புஷ்பம் சிதறிக்கிடைப்பதைப்பார்த்து )

2வது மாணாக்கன்:—இது என்னடா, விசாரசருமா?

3வது மாணாக்கன்:—அதுதான் இந்த பிள்ளையாண்டான் பூஜை ஸ்தலம்.

4வது மாணாக்கன்:—ஓகோ! இதில் பூஜைவேறு நடக்கிறதோ!

2வது மாணாக்கன்:— என்னபூஜை தெரியுமா? பாலைக் கறந்து இந்த மண்ணால் செய்த மகாலிங்கத்துக்கு அபிஷேகம் செய்து புஷ்பத்தை அதில் கொட்டி கூத்தாடுவது தான் பூஜை.



1வது மாணாக்கன்:—குற்றமில்லை, மாடுமேய்க்கும் அழகு. ஏண்டா! விசாரசருமா! அபிஷேகம், அலங்காரம், எல்லாம் செய்து நைவேத்தியம் என்னடா?

விசாரசருமர்:— நண்பர்களே! நீங்கள் என்னை பரிகாசம் செய்கிறீர்கள். ஏதோ வீண்காலம் போக்கவேண்டாம். பசுநிரைகளை மேய்ப்பதோடு, ஈசனது அன்பிற்குரியவனாகி பேரின்பம் என்கிறார்களே அதையும் அடையலாம் என்று இச்சிறு கைங்கர்யத்தைச் செய்துகொண்டிருக்கிறேன். அது உங்களுக்கு கேவலமாகத் தோன்றுகிறதுபோலும். உங்களுடைய மனப்போக்கு அப்படி.

1வது மாணாக்கன்:— சரிதாண்டா வாருங்கள். விசாரசருமா போனதுபோகட்டும், நீ பூஜைசெய்ய என்ன மந்திரம் கற்றுக்கொண்டிருக்கிறாய்?

விசாரசருமர்:— நான் ஒரு மந்திரமும் கற்றுக்கொள்ளவில்லை, ஆனால் பக்தர்கள் பாடிய பாட்டுக்களைப்பாடி பூஜை செய்கிறேன்.

1வது மாணாக்கன்:— அதுகளில் ஒரு பாட்டு பாடு பார்க்கலாம்.

விசாரசருமர்:—

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந்தந்து தரணியொடு
    வானாளத்தருவரேனு
மங்குவாரவர் செல்வமதிப் போமல்லோ மாதேவர்க்
    கேகாந்தரல்லாராகில்
அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயரா
    யாவுரித்துத்தின்றுழலும் புலையரேனும்,
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகி
    லவர்கண்டீர் நாம் வணங்குங் கடவுளாரே.

மாணாக்கர்கள்:— நேரமாகிவிட்டது வாருங்கள் போவோம். (போகிறார்கள்.)

(காட்சி முடிவு.)

## காக்ஷி—4.

இடம்:—மண்ணியாற்றங்கரையோரம் அடர்ந்த புல் உள்ள சோலை.

காலம்:—காலை.

பாத்திரங்கள்—விசாரசருமர், ஓர் சிறு பையன.
(மண்ணை சிவலிங்கமபோல் குவித்தும், புது மண் குடத்தில் பால் கறந்தும், பக்கத்தில் புஷ்பங்கள் தட்டிலும் வைக்கப்பட்டிருக்கின்றன).

விசாரசருமர்:— வேதியர்கள் யாவரும் நமக்கு இப்பசு மேய்க்கும் உத்தியோகம் அன்புடன் அளித்தது, நமது நற்காலமே. பசுபதிக்கு அபிஷேகம் செய்து கண்ணாரக்காணும் பாக்கியம் பெறறேன்.

(பாலை யெடுத்து அபிஷேகம் செய்கிறார்)

இன்று பசுக்கள் நிரம்பப்பால் கொடுத்திருக்கின்றன எம்பெருமானே! சிறியவனுக்கு மந்திரம் தெரியாது. ஆராதனை செய்யும் முறை தெரியாது, பெரியோர்கள் பாடிய பாசுரத்தையாவது உன்மேல்கொண்ட பிரியத்தால் உளறுகிறேன். எல்லாப்பிழையும் நீயே பொறுத்துக்கொள்ளவேண்டும்.

(புஷ்பத்தை எடுத்து லிங்கத்தின் மேல் சூட்டுகிறார்).

"திருச்சிற்றம்பலம்."

இராகம் : பைரவி.

பத்தனாய்ப்பாடமாட்டேன் பரமனே பரமயோகி
யெத்தினாற்பத்தி செய்கேனென்னை நீ யிகழவேண்டா
முத்தனே முதல்வா தில்லையம்பலத்தாடுகின்ற
வத்தனின்னுடல் காண்பானடியனேன் வந்தவாறே.

இராகம் : தோடி.

பண்ணே னுனக்கான பூசையொரு வடிவிலே
பாவித் திறைஞ்ச வாங்கே
பார்க்கின்ற மலரூடு நீயே யிருத்தியப்
பனிமல ரெடுக்க மனமும்



நண்ணேனலாமலிரு கைதான் குவிக்கவெனி
னாணுமென்னுளம் நிற்றிநீ
நான்கும்பிடும்போ தரைக்கும்பி டாதலா
லென்பூசை செய்யன் முறையோ

விண்ணே விணாதியாம் பூதமே நாதமே
வேதமே வேதாந்தமே
மேதக்க கேள்வியே கேள்வியாம் பூமிக்குள்
வித்தேயவித்தின் முளையே

கண்ணே கருத்தே யெனெண்ணே யெழுத்தே
கதிக்கான மோனவடிவே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாகரக்கடவுளே.

சிறுவன்:— ஐயா!யோ! பாலையெல்லாம் இப்படிக் கறந்து வீணாக மண்மேல் ஊற்றுகிறார்களே, இந்த பாப்பாவூட்டு அய்யா. இப்படிச்செய்ய அக்ராரத்து அய்யாவெல்லாம் கவனிக்காமல் இருக்காங்களே. நானும் பத்து நாட்களாக பாத்திட்டு இருக்கிறேன். தினம் தினம் இப்படி செஞ்சா. ஏ! தம்பி இதென்ன இப்படி செய்துகொண்டிருக்கிறீங்க. மாட்டுலே எத்தனை தடவைக்கு பால் கறக்க இருக்கும். அந்த மாடுகள்தான் என்னத்திற்கு உருப்புடும்.

விசாரசருமர்:— சிறுவனே, உன் வேலையைப்பார் என் கடனை நான் செய்கிறேன்.

சிறுவன்:— ஏ! அய்யா சும்மா சும்மா பாலைக்காக்காதீங்க. மாடு கெட்டுபோயிடும்.

விசாரசருமர்:— சிறுவனே! மாட்டைப்பற்றிய கவலை எனக்கா — உனக்கா — நீ வாய்பேசாமல் பார்த்துக் கொண்டே இரு. நானா பாலைக்குடிக்கிறேன்? ஈசனது அபிஷேகத்திற்கு அல்லவா உபயோகப்படுகிறது.

68151

சிறுவன்:— என்ன தம்பி! மண்மேலே பாலை ஊத்திவிட்டு ஈசன் என்கிறாயே. நான் போய் பாப்பாவூட்டுலே சொல்லிவிடுறேன்.

விசாரசருமர்:— ஏய்! சிறுவனே! போய்ச்சொல். இங்கு நில்லாதே. (சிறுவன் போகிறான்)

எனது அப்பனே! மெய்ப்பொருளே! சகலபோக பாக்கியங்களையும் கொடுக்கும் பரமகிருபாநிதியே! உன் பெருமையை என்னென்று சொல்வேன் உன் திருவிளையாடல்களைக்கேட்கும் பொழுது என்மனம் எப்படி பூரிக்கிறது. அப்பனே! என்று உன்னைக் கண்டு ஆனந்தமடைவேன்? இன்று கைங்கர்யம் முடிந்தது. மாடுகளைத்தண்ணீர் அருந்த ஓட்டிக் கொண்டு போகவேண்டும்.

(மாடுகளை ஓட்டிக்கொண்டு போகிறார்)

(காட்சி முடிகிறது)

---

## காக்ஷி—5.

இடம்:— எச்சதத்தர் வீடு.

காலம்:— காலை.

பாத்திரங்கள்— எச்சதத்தர், பிராமணர், பாடசாலை உபாத்தியாயர்.

பிராமணர்:— எச்சதத்தரே! சும்மா சொல்லக்கூடாது உமது பிள்ளையை—இப்பொழுதுதான் இடையர்கள் ஒழுங்காய் இருக்கிறார்கள். இடையன் இடையன் என்று நாமெல்லோரும் நினைத்து அவனிடம் மாட்டை விட்டது இப்பொழுதுதான் தெரிகிறது. மாடுகள் புஷ்டியுடனும் பாலும் நிறையக்கறக்கின்றன. முன்னே மாடுகளுக்கு காயம் இல்லாது இருக்காது. சதா மட்டைக்கழியாலே அடிக்கிறதும் தார்குச்சியால் குத்துவதுமாகத்தான் இருப்பான்.



எச்சதத்தர்:— என்னமோ! பசுக்கள் என்றால் அந்யாயமாகத்தான் ஆசைப்படுகிறான். எங்காத்திலே பசுமாட்டுத் தொழுவத்திலேதான் உட்கார்ந்து இருப்பான். ஆகாரம் செய்வதென்றால்கூட அவனுக்கு நஞ்சாக இருக்கும்.

பிராமணர்:— என்னுங்கனும் கன்றுகளைப் பிரிந்த மாடுகள்கூட சற்று சும்மா இருக்கும். விசாரசருமனைக் காணாத மாடுகள் கதறுவதை இவ்வளவு அவ்வளவு என்று சொல்லமுடியாது. இது ஒரு ஆச்சர்யமாக இருக்கிறது. மேலும் உமது குழந்தையின் குணம் மேன்மையான குணம். இப்படிப்பட்டக் குழந்தை நமது அக்ரகாரத்திலேயே கிடையாது. உம்மை ஸ்தோத்திரம் செய்வதாய் நினைக்கக்கூடாது, என் மனமாரச் சொல்லுகிறேன்.

(பாடசாலை உபாத்தியாயர் வருகிறார்)

உபாத்தியாயர்:— எச்சதத்தரே! ஏது இது பெரும் சங்கடமாக இருக்கிறதே.

எச்சதத்தர்:— உபாத்தியாயரே! நீர் பாடசாலைக்குப் போகவில்லையோ! எங்கிருந்து வருகிறீர்?

உபாத்தியாயர்:— ஏங்காணும், உமது பிள்ளையை மாடு மேய்க்கச்சொல்லி, எங்காத்து மாட்டுப்பாலையெல்லாம் கறந்து வீணாக்கச்சொன்னீரோ?

எச்சதத்தர்:— என்ன செய்தானும்?

உபாத்தியாயர்— என்ன செய்தான்—மண்ணைச் செய்தான்—பாலைக்கறந்து மண்மேல் ஊற்றி சாமியாம், பூஜையாம், வெகு அழகாயிருக்கிறது. இது மாதிரி தினம் நடந்து வருகிறதாம்.

பிராமணர்:— உபாத்தியாயரே! உமக்கு யார் சொன்னது இது உண்மையா? அபாண்டமாய் சொல்லாதேயும்.

68151

உபாத்தியாயர்:— ஓய்! உமக்கென்ன தெரியும் அங்கு நடக்கும் வைபவத்தை, அனியாயம் செய்கிறான். தினம் ஒரு மாடுகூட விடுவதில்லை, எல்லா பசுக்களிடத்திலும் பால் கறந்து விடுகிறான்.

பிராமணர்:— எங்காணும், அவன் மாடுமுழுவதும் பால் கறந்து விட்டால், வீட்டில் பால் கறக்கும்பொழுது குறைவதில்லையே! முன்னைவிட இப்பொழுது அதிகமாக கறக்கிறதே! அதற்கு காரணம் என்ன?

உபாத்தியாயர்:— அதெல்லாம் யார் கேட்கிறார்கள்? எச்சதத்தரே, இப்பொழுதும் உமது பிள்ளை மண்ணியாற்றங்கரையில்தான் இருக்கிறான். நீர் போய் பாரும், கொஞ்சம் கண்டித்துவையும்.

எச்சதத்தர்:— அப்படியா செய்கிறான் நான் போய் பார்க்கிறேன். (போகிறார்.)

(காட்சி முடிவு.)

---

காக்ஷி — 6.

இடம்:— மண்ணியாற்றங்கரை.

காலம்:— காலை.

பாத்திரங்கள்:— பிராமணர்கள், — எச்சதத்தர் — சிறுவன் — விசாரசருமர் — சிவபெருமான் — பார்வதிதேவி.

(விசாரசருமர் ஸ்நானம் செய்துவிட்டு மண்ணால் சிவலிங்கம் செய்து துதிசெய்துகொண்டிருக்கிறார். பக்கத்தில் குடத்தில் பால் இருக்கிறது. ஒரு தட்டில் புஷ்பங்கள் இருக்கின்றன எச்சதத்தர் கிளா மரத்தில் ஏறி ஒளிந்துகொண்டிருக்கிறார்).

விசாரசருமர்:— ஈசா! என் கைங்கர்யத்தை ஏற்றுக் கொள்வாய். சிறியவன் அர்ச்சிக்கவும் வழி தெரியாதவன். உன் பெருமையன்றோ உலகம் செழித்திருப்பது.



இராகம் — கமாஸ்.

அப்பநீ யம்மைநீ யையனுநீ யன்புடைய மாமனு மாமியுநீ
யொப்புடைய மாதரு மொன்பொருளு நீ
யொருகுலமுஞ் சுற்றமு மோரூரு நீ
துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்றுவாய்நீ
துணையா யென்னெஞ்சந் துரப்பிப்பாய் நீ
யிப்பொநீ யிம்மணிநீ யிம்முத்துநீ யேறூர்ந்தசெல்வநீயே.

(திருச்சிற்றம்பலம்.)

இராகம் : சுருட்டி — தாளம் : சாபு.

மாற்றறியாத செழும்பசும் பொன்னே
மாணிக்கமே சுடர் வண்ணக்கொழுந்தே
கூற்றறியாத பெருந்தவருள்ளக்
கோயிலிருந்த குணப்பெருங் குன்றே
வேற்றறியாத சிற்றம்பலக்கனியே
விச்சையில் வல்லவர் மெச்சும் விருந்தே
சாற்றறியாதவன் சாற்றுங்களித்தாய்
தனிநடராஜ வென்சற்குரு மணியே.

(எச்சதத்தர் கீழே இறங்கி வருகிறார்:

எச்சதத்தர்:— அடடா! இவனது மூடத்தன்மைதான் என்ன. இக்குடத்தில் இருக்கும் பால் யாவையும் இம் மண்முட்டிலா ஊற்றப்போகிறான், இது என்ன பூஜை. அடே! விசாரசருமா, எழுந்திரு நான் கூப்பிடுவது காதில் விழவில்லையா! சண்டாளா! பால்களை தினம் இப்படி கெடுக்கிறாயே ஊரார் தூற்றுகிறார்களே, இதற்குத்தானா நீ மாடு மேய்ப்பதாக ஒப்புக்கொண்டாய். போதும் உன்பூஜை, எழுந்துபோடா. ஒன்றுக்கும் அசையாமல் கருங்கல்லைப்போல் உட்கார்ந்திருக்கிறான் பார். இவன் நெஞ்சம்தான் என்ன கல்லா?

(கையில் இருந்த பிரம்பால் அடிக்கிறார் )

விசாரசருமர்:— கைலாயபதி! ஜெகதீசா! பார்வதிரமணா! பக்தர்களை ரக்ஷிக்கும் பரமகிருபாநிதியே! நான் உன் அடைக்கலம்:—

இராகம் — தோடி.

“வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட
மரபினில் யானொருவனன்றோ வகையறியேனிந்த
ஏழைபடும் பாடுனக்குத் திருவுளச்சம்மதமோ
இதுதகுமோ விதுமுறையோ இது தருமந்தானோ
மாழைமணிப்பொது நடஞ்செய் வள்ளால் யானுனக்கு
மகனலனோ நீ யெனக்கு வாய்த்த தந்தையலையோ
கோழையுல குயிர்த்துயர மினிப்பொருக்கமாட்டேன்
கொடுத்தருணின்னருளொளியைக் கொடுத்தருளிப்
பொழுதே”

எச்சதத்தர்:— ஆ! இவன் என்ன பேயா, எத்தனை தரம் சொல்லியும், அடித்தும், இதை விட்டு எழுந்தான் இல்லை. தெய்வமா, பால் அபிஷேகமா, பால் அபிஷேகம் செய்யப்பா.

(காலால் பால் குடத்தை இடறி விடுகிறார்)

விசாரசருமர்:— ஹா! தெய்வமே! இப்படிப்பட்ட அபசாரம் செய்தானே பாவி. அடே! அருமை அப்பனுக்கு அபிஷேகத்திற்கு வைத்த பாலையா காலினால் இடறி கீழே ஊற்றினாய் சண்டாளா! சிவத்துரோகி நீ எனக்கு அப்பனோ, பிராம்மணனோ! குருவோ! இவ்வகிர்த்தியம் செய்ய உனக்கு வந்த கேடென்ன. ஐயோ! இப்பொழுது என்ன செய்வேன், அடசண்டாளா! இதோபார், உன்கால்தானே திருமஞ்சனத்திற்கு வைத்திருக்கும் பாலைக் கொட்டியது.

(என்று சொல்லி அங்கு கிடந்த கோலை யெடுக்கிறார். அது மழுவாகிறது. உடனே தன் தகப்பனாரின் காலை வெட்டுகிறார்.)

எச்சதத்தர்:— ஹா! என் கால் போய்விட்டதே, என்ன செய்வேன். தகப்பன் என்றுகூட பார்க்கவில்லையே



நீ எனக்குப் பிள்ளையாகப்பிறந்தும் இப்படிப்பட்ட கைமாறுதானா எனக்கு அளிக்கவேண்டும்.

விசாரசருமர்:— ஈசா! எனது கைங்கர்யத்தை அன்புடன் ஏற்றுக்கொள். வைத்திருந்தபாலை எனது தகப்பன் அறிவீனத்தால் இடறி ஊற்றி விட்டான். அதற்கும் தண்டனை கொடுத்துவிட்டேன், எம்பெருமானே! உமையாள் பாகனே!

கங்கையைச்சடையுள்வைத்தார் கதிர் பொறியாவும் வைத்தார்,
திங்களைத்திகழவைத்தார் திசை திசை தொழுவும் வைத்தார்,
மங்கையைப் பாகம் வைத்தார் மான்மறி மழுவும் வைத்தார்.
அங்கையுளனலும் வைத்தா ரையனையாறனோே.

(திருச்சிற்றம்பலம்)

(சிவபெருமான் உமாதேவியாருடன் ரிஷபாரூடராய் ஆகாயத்தில் தோன்றுகிறார். ஒரு புறம் பிராமணர்கள் ஆற்றில் ஸ்நானம் செய்கிறார்கள். விசாரசருமர் ஈசனைக்கண்டு கூத்தாடுகிறார்.)

இராகம் தேவகாந்தாரி-தாளம்: ரூபகம்,

மாதர் பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும்பாடிப்
போதோடு நீர் சுமந்தேத்திப் புகுவாரவர்பின் புகுவேன்.
யாதுஞ் சுவடு படாமலையா றடை கின்ற போது
காதன் மடப்பிடியோடுங்களிறுவருவனக்கண்டேன்.
கண்டேனவர் திருப்பாதங்கண்டறியாதனக் கண்டேன்.

விசாரசருமர்:— ஜகதீசா! ஆபத்பாந்தவா! அநாதரக்ஷகா! கைலையங்கிரிவாசா! பார்வதிரமணா, கண்டேன்! கண்டேன்!! களி கொண்டேன் பிரபோ, கிருதார்த்தனானேன், என் அப்பனே! ஆதியே, அனாதியே, பக்தர்கள் நேயனே பரமானந்தம்! பரமானந்தம்!!

(பாடுகிறார்)

இராகம் : பூர்வகல்யாணி — தாளம் : ஆதி.

பொன்னார் மேனியனே புலித்தோலை யரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றையணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
யன்னே நின்னையல்லால் யினி யாரை நினைக்கேனே.

சிவபெருமான்:— பக்தா; மெச்சினேன்! மெச்சினேன்!! நீயே உண்மையான பக்தன், யாம் உன்னால் செய்யப்பட்ட எல்லா கைங்கர்யத்தையும் மகிழ்வுடன் அங்கீகரித்துக்கொண்டோம், உமையாளும் உன்பால் அன்புகொண்டாள். குழந்தாய், என் கைங்கர்யத்தின் பொருட்டு உனது தந்தையென்றும் பாராது பால் குடத்தை உதைத்த காலையும் வெட்டினதைக்கண்டோம். உன் பக்தியின் வலிமையைக் கண்டு, ஆனந்தங்கொண்டேன்.

(பரமன் இங்கு விசாரசருமரை அணைத்து)

குழந்தாய்! நமது தொண்டர்களுக்கு உன்னைத் தலைவனாக்கினோம். மேலும் நான் ஏற்றுக்கொண்ட அமுதமும், பரிவட்டமும், புஷ்பமும் பின்பு உனக் கேகிடைக்கும்படி, "சண்டேசுரர்" பதத்தைத் தந்தோம். இதோ எனது நிர்மால்யமான கொன்றை மாலையை அணிந்துகொள்.

(தனது கொன்றை மாலையை விசாரசருமருக்கு சூட்டுகிறார்)

விசாரசருமர்:— பரமனே! உன் அருள், உன் கிருபை நம்பினேன்.

சிவபெருமான்:-சண்டேசுரா! நீ நமது தொண்டர்களுக்கு தலைவனானபடியால் எனது சன்னிதானத்திலேயே இருக்கக்கடவாய். எச்சதத்தா நீ செய்த வினையை அனுபவித்தாய் எனது பக்தனால் தண்டிக்கப்பட்டதால் உனக்கும் மோக்ஷ பதவியைத் தந்தோம்.



விசாரசருமர் என்கிற சண்டேசுரர் விமானத்தில் ஏறி ஜோதியுடன் கலக்கிறார். எச்சதத்தருக்கும் கால் சௌக்கியமாகி மோக்ஷத்தை அடைகிறார்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

(காட்சி முடிகிறது)

நாடகம் முற்றிற்று.

68151

பாரதி பிரஸ், மன்னார்குடி.